DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**

**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குருநாதன் | Caste | : | |
| Father Name | : | அழகுமுத்து | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.06.2026.**

**PW - 28**

**(**எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 25.05.2019 ம் தேதி துறையூர் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, உப்பிலியபுரம் காவல் நிலையம் எனது ஆளுகைக்கு உட்பட்டது. உப்பிலியபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. விஜயகுமார் பதிவு செய்த உப்பிலியபுரம் காவல் நிலைய குற்ற எண். 121/2019 இதச பிரிவுகள் 147, 294(பி), 323 மற்றும் 302 வழக்கில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 15.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரிமுத்து, சுப்ரமணியன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்

தயார் செய்தேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.14** ஆகும். சம்பவ இடத்தை பொருத்து ஒரு மாதிரி வரைபடம் வரைந்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.15** ஆகும். பின்பு, அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றே 15.45 மணியளவில் சம்பவ இடத்திலிருந்த இறந்துபோன கார்த்திக் என்பவருக்கு சொந்தமான வெள்ளை மற்றும் பிரௌன் கலரில் சிறிய கட்டம் போட்ட துண்டு –1, மற்றும் சிகப்பு மற்றும் சிமெண்ட் கலர் கலந்த Aditi என்ற ரப்பர் செருப்பு ஒரு ஜோடி ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி கைப்பற்றிய பொருட்கள் **அ.த.சா.பொ.5 மற்றும் அ.த.சா.பொ.6** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.16** ஆகும். பின்னர், சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த பிரேதத்தின்மீது பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.17** ஆகும். பிரேதத்தை காவலர் ரமேஷ் மூலம் துறையூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பிரேதத்தின் மருத்துவ ரீதியான இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி அதே காவலர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். பின்னர், அன்றைய தினம் மாலை 18.30 மணியளவில் விபத்து நடந்ததை தொடர்ந்து கார்த்திக் தாக்கப்பட்ட இடமான இரண்டு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் முன்பாக அதே சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.18** ஆகும். அந்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.19** ஆகும். பின்னர், சாட்சிகள் பாலமுருகன், ஹரிபாலன், கார்த்திக், சுப்ரமணி, நாகலட்சுமி, ராஜேந்திரன், சரவணன், மாரிமுத்து, சுப்ரமணி ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், 26.05.2019 அன்று எதிரிகள் சரவணன் (எ) ராஜ சரவணன், ராஜேந்திரன் (எ)

பாலாஜி, மனோகரன் (எ) ராஜா மனோகரன், ஹரிதாஸ், மூர்த்தி ஆகிய எதிரிகளை அன்றைய தினம் 18.00 மணிக்கு தாத்தயங்கார்பேட்டை பஸ் ஸ்டாப்பில் வைத்து காரணம் கூறி சாட்சிகள் மணிவாசகம், கிராம நிர்வாக அலுவலர் எரகுடி, பழனிவேல் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது 1ம் எதிரி சரவணன் (எ) ராஜ சரவணன் தன்னிச்சையாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1ம் எதிரி தன்னை அழைத்து சென்றால் சம்பவத்தின்போது பயன்படுத்திய கட்டையை எரகுடி கிராம நிர்வாக அலுவலகம் பின்புறம் மறைவில் மறைத்து வைத்துள்ளதை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி சாட்சிகள் முன்பாக பதிவு செய்து 1ம் எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 20.30 மணியளவில் 1ம் எதிரி ராஜ சரவணன் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் பின்புறம் உள்ள சீத்தமுள் செடி மறைவில் இருந்த எடுத்து ஆஜர் செய்த சுமார் 79 செ.மீ. நீளமுள்ள சற்று வளைந்த கட்டை ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ.12 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கட்டை ஏற்கனவே அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர், சாட்சிகள் மணிவாசகம், பழனிவேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். தடய பொருட்களை இரண்டு படிவங்கள் 91 மூலம் காவலர் மூலம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த இரண்டு படிவங்கள் அ.த.சா.ஆ.20 வரிசை ஆகும் (2–எண்ணிக்கை). பின்னர், பிரேத பரிசோதனை அலுவலுக்கு சென்ற ரமேஷ் பிரேதத்தின் மீது காணப்பட்ட உடைகளான ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.த.சா.பொ.2 முதல்

அ.த.சா.பொ.4 வரையிலானவை மற்றும் JB என்ற பெயர் கொண்ட எலாஸ்டிக் பிரௌன் நிற பாக்கெட் ஜட்டி ஆகியவற்றை தனி அறிக்கையின் மூலம் ஒப்படைத்தார். அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவற்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். மேற்படி பிரௌன் நிற ஜட்டி **அ.த.சா.பொ.7** ஆகும். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.21** ஆகும். பின்னர், 27.05.2019ம் தேதி சாட்சிகள் ராஜேஸ்வரி, சேகர், செந்தில் குமார், விஜயகுமார் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.05.2019 அன்று சாட்சிகள் செல்வராஜ், ஜெயபால், சக்திவேல், விஜயகுமார், ஹஸ்ரப் அலி, கிருஷ்ணன், பாலசுப்ரமணியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 04.06.2019 அன்று சாட்சிகள் பழனியாண்டி, ராமராஜ், கோபால் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 08.07.2019 அன்று இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த 2ம் எதிரி வரதராஜன் என்பவரை காலை 10.00 மணிக்கு முருகூர் பஸ் ஸ்டாப்பில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன். அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர், டாக்டர் போஜராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். 10.07.2019 அன்று சாட்சிகள் சிதம்பரம், சங்கர், தலைமை காவலர் காமராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 17.07.2019 அன்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் போஜராஜன் அவர்களிடம் இறுதி கருத்துரை பெற்று மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். தடய அறிவியல் ஆய்வக பகுப்பாய்னர் பிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வறிக்கைகள் பெற்றேன். 21.08.2019 அன்று சாட்சி பாலமுருகன் மற்றும் சேகர் இருவரையும் மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பெற்றேன். அன்றே, இந்த வழக்கில் சட்ட பிரிவுகள் 147, 294(பி), 323 மற்றும் 302 இதச பிரிவுகளிலிருந்து, 147, 294(பி), 323, 302, மற்றும் 506(2) ஆக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்து குற்றவியல்

நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.22** ஆகும். பின்னர், சாட்சிகள் கிஷோர், சேதுபதி, ராபார்ட் ஆகியோரையும் அன்றே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 04.09.2019 அன்று மருத்துவர் விஜயகுமார், அன்னை மருத்துவமனை துறையூர் என்பவரை விசாரித்து சிதம்பரம் என்பவருக்கு சிகிச்சை அளித்தது தொடார்பாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது 147, 294(பி), 323, 302, மற்றும் 506(2) இதச பிரிவுகளின் கீழ் 04.09.2019 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் அ.சா.2 ராஜேஷ்வரி, அ.சா.3 சேகர், அ.சா.4 செந்தில்குமார், அ.சா.6 ஹரிபாலன் ஆகியோர் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளனர். அ.சா.9 கிருஷ்ணன், அ.சா.10 ராமராஜ் ஆகியோர் சம்பவத்தை நேரடியாக பார்த்தாகவும் சொல்லியுள்ளனர். அ.சா.11 மாரிமுத்து, அ.சா.14 சுப்ரமணி ஆகியோர் தங்கள் முன்னிலையில் நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயாரித்தது பற்றி கூறியுள்ளனர். அ.சா.16 ஜெயபால், அ.சா.20 பழனியாண்டி ஆகியோர் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறியுள்ளனர். அ.சா.13 பாலசுப்ரமணியன், அ.சா.18 சிதம்பரம், அ.சா.15 கோபால் ஆகியோர் சம்பவத்தை கேள்விப்பட்டது பற்றியும் இதர விவரங்கள் குறித்தும் வாக்குமூலத்தில் கூறியுள்ளனர். அ.சா.17 விஜயகுமார் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளார். அ.சா.24 சேதுபதி தனது அடையாள அட்டை மூலம் தனது நண்பர் கிஷோர் என்பவர் காரை எடுத்து சென்ற நிலையில், அதை ஹரிபாலன் மூலம் இறந்துபோன கார்த்திக்–க்கு ஓட்டி பழக கொடுத்தது பற்றி வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்.

**<u>1, 3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளர் விஜயகுமார் எத்தனை மணிக்கு எனது பார்வைக்கு வைத்தார் என்றால் 25.05.2019 அன்று மதியம் சுமார்

2.45 மணியளவில் சம்பவ இடத்தில் வைத்து எனது பார்வைக்கு வைத்தார். அப்போது முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டதா என்பதை உதவி ஆய்வாளரிடம் கேட்டேன். அதை அவர் துரித தபால் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாக கூறினார். அன்று மதியம் 2.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக சொல்லும் முதல் தகவல் அறிக்கை அன்று இரவு 11.55 மணிக்கு நீதித்துறை நடுவர் பெற்றுள்ளார் என்றால் அந்த விவரம் எனது விசாரணையில் தெரியவரவில்லை. மேற்படி காலதாமதம் தொடர்பாக அ.சா.27 உதவி ஆய்வாளர், அ.சா.25 காவலர் காமராஜ் ஆகியோர் எனது விசாரணையில் குறிப்பிட்டு காரணம் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் புகார் யாரால் எழுதப்பட்டது என்று தெரியவரவில்லை. ஆனால், அ.சா.1 பாலமுருகன் அதை உதவி ஆய்வாளரிடம் கொடுத்துள்ளார். அ.சா.1 பாலமுருகனிடம் கையொப்பம் மட்டும் பெற்று புகார் பின்னிட்டு ஜோடிக்கப்பட்டது என்றும், அதன் பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றும், அதனால்தான் காலதாமதமாக நீதித்துறை நடுவரிடம் முதல் தகவல் அறிக்கை ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் எரகுடியில் துறையூர் காவல் நிலைய புறகாவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், அது அப்போது செயல்பாட்டில் இல்லை. மேற்படி புற காவல் நிலையம் அந்த சமயத்தில் செயல்பாட்டில் இல்லையென தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீரப்பன் வாழைத்தோட்டத்தில் உள்ள சமாதிக்கு முன்பு உள்ள திண்ணையில் தான் கார்த்திக்-ன் பிரேதம் கிடந்தது என்றால் சரிதான். நான் பார்த்தபோது அந்த சிமெண்ட் திண்ணையில் இரத்தம் இருந்ததாக மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி சிமெண்ட் திண்ணையில் இருந்து இரத்தம் படிந்த சிமெண்ட் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அங்கு இரத்தம் எதுவும் இல்லாததால் தான் அதை நான்

கைப்பற்றவில்லை என்றும் மகசரில் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் எனக்கு அங்கு இரத்தம் இருந்ததா என்று ஞாபகம் இல்லை. அந்த இடத்தில் கைப்பற்றியதாக சொல்லும், இரப்பர் செருப்பு மற்றும் துண்டு அதாவது அ.த.சா.பொ.5 மற்றும் 6ல் இரத்தம் இருந்ததாக மகசர் மற்றும் படிவம் 91ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது பிரேத விசாரணை அறிக்கையில் இறந்தவரின் உடையில் இரத்தம் காணப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பிரேத விசாரணையில் பிரேதத்தில் வெளிப்படையான காயங்கள் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரேதத்தை அந்த இடத்திலிருந்து எத்தனை மணிக்கு எதன் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றால் 18.15 மணிக்கு ஒரு வாகனம் மூலம் காவலர் ரமேஷ் மூலம் மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பினேன். அ.த.சா.ஆ.18 2வது பார்வை மகசரில் சம்பவ இடத்தில் தடயங்கள் ஏதும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 பார்வை மகசர்கள் 2 மாதிரி வரைபடங்கள், அ.த.சா.ஆ.16 கைப்பற்றுதல் மகசர் மற்றும் பிரேத விசாரணை அறிக்கை ஆகியவை 27.05.2019 அன்று நீதித்துறை நடுவரால் பெறப்பட்டதாக சீல் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கேற்ப ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.1 புகாரில் 1ம் எதிரி சரவணன் இறந்துபோனவரை கட்டையால் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி தாமாக கூறுகிறார், குவிச பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். அ.சா.1 பாலமுருகன் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் ஒரு பெரியவரை காரில் மோதிவிட்டு போனபிறகு அந்த பெரியவர் வீட்டில் இருந்த 2 நபர்கள் தன் தம்பியை அதே காரில் VAO அலுவலகம் அருகே அழைத்து வந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை, வேறு விதமாக கிருஷ்ண மூர்த்தி மற்றும் கிருஷ்ணன் அவ்வாறு அழைத்து வந்ததாக

கூறியுள்ளார். அ.சா.1 புகார் மற்றும் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கார்த்திக்கை சேகர் மருத்துவமனையில் விட்டுவிட்டு அவர் தண்ணீர் கேட்டதாகவும், அதை வாங்கிவர போனதாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தண்ணீர் கேட்டது பற்றி சொல்லவில்லை. அ.சா.1 பாலமுருகன் சம்பவத்தில் தனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றாலும், காயம் ஏற்படவில்லை என்றுதான் மறு வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் கையால் அடித்ததில் வெளிகாயம் இல்லை என்றும், லேசான வலி இருந்ததாகவும் சொல்லியுள்ளார். அ.சா.1 புகார் மற்றும் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் தன் தம்பிக்கு கழுத்து, நெஞ்சு, தலை, உயிர்நாடி ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால், மேற்படி பகுதிகளில் தன் தம்பியை எதிரிகள் மாறிமாறி அடித்து எட்டி உதைத்தாக அ.சா.1 சொல்லியுள்ளார். அ.சா.5 சுப்ரமணி என் விசாரணையில் கார்த்திக்கை சேகர் மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு தண்ணீர் கொண்டு செல்வதற்குள் அவர் காணவில்லை என்றும் மருத்துவமனையில் இருந்த நர்ஸிடம் கேட்டதாகவும் அவர் இப்போது இங்குதான் உட்காந்திருந்தார் என்றும் அவர் எங்கு சென்றார் என்று தெரியவில்லை என்று சொன்னதாகவும் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால், மேற்படி மருத்துவமனைக்கு போய் பார்த்ததாக கூறியுள்ளார். அ.சா.5 எனது விசாரணையில் கார்த்திக்கை சமாதியில் சென்று பார்த்த போது அங்கு இரண்டு நபர்கள் உட்காந்திருந்ததாகவும், கார்த்திக்கின் கால் மட்டும் தெரிந்ததாகவும், தன் மகனை எழுப்பி பார்த்ததாகவும் அப்போது அவர் வாயில் இருந்து இரத்தத்துடன் எறும்புகள் வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.7 நாகலட்சுமி என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் தன் மகன் கார்த்திக் ஈரோட்டில் ஒரு கம்பெனியில் வேலை செய்ததாகவும் கும்பாபிஷேகத்திற்காகதான் வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

சரிதான். அ.சா.7 தனது வாக்குமூலத்தில் சம்பவ இடம் சென்ற போது எதிரிகள் தன்னையும் தனது கணவரையும் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.7 தனது வாக்குமூலத்தில் தான் போய் பார்த்தபோது தன் மகனின் கண்கள் மற்றும் நெஞ்சில் இரத்த காயங்கள் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் தொடர்பாக சிதம்பரத்தின் மீது மோதியது தொடர்பாக வேறு வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அவர் வேறு புகார் எதுவும் தரவில்லை. அவ்வாறு விபத்து ஏற்படுத்தியதாக கூறும் காரை காவல் நிலையத்திற்கு வரவழைத்து பார்த்து அனுப்பிவைத்தேன். அது எந்த தேதி, நேரம் என்றால் ஞாபகம் இல்லை. அந்த காரை நிலையத்தில் ஆஜர் செய்ததாக சாட்சிகள் யாரும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. கிஷோர், சேதுபதி காரை காவல் நிலையத்தில் பிடித்து வைத்ததாக சொல்லியுள்ளார்கள். எரகுடிக்கும், தாத்தயங்கார்பேட்டை பஸ் ஸ்டாப்பிற்கும் சுமார் 12 கி.மீ துாரம் இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. அ.சா.23 மணிவாசகம் தனது வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்று பார்த்ததாக நேரம் மட்டும் சொல்லவில்லை பார்த்ததாக சொல்லியுள்ளார். தாத்தயங்கார்பேட்டை பஸ் ஸ்டாப் அருகே கைது செய்த எதிரிகளை மீண்டும் எரகுடி VAO அலுவலகம் அழைத்துவந்து தான் அ.த.சா.பொ.1 கட்டை கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகு தான் அ.சா.23 மற்றும் பழனிவேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அவர்களது வாக்குமூலம் பதிவு செய்த இடம் தாத்தயங்கார்பேட்டை பஸ் ஸ்டாப் என்று சொல்லப்பட்டுள்ளது. அவரது வாக்குமூலத்தில் அந்த விவரத்தை சொல்லியுள்ளார். அவர்களை தாத்தயங்கார்பேட்டை பஸ் ஸ்டாப் அருகே வைத்து விசாரித்தேன். அதன் பிறகு அவர்களை மீண்டும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்ததற்கு தனியாக வாக்குமூலம் பதிவு

செய்யவில்லை. நான் சொல்ல சொல்ல அவ்வபோது லேப்டாப்பில் தட்டச்சு செய்தார்கள். அதை பின்பு காவல் நிலையம் வந்து பினிஷ் செய்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது. காவல் நிலையத்தில் வைத்துதான் அவர்களது வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவை யாரால் எழுதப்பட்டது என்றால் என்னுடன் இருந்த காவலர் ஒருவர் எதிரி சொன்னதை நான் திரும்ப சொல்ல எழுதியுள்ளார். அவர் பெயர் ஞாபகம் இல்லை. அந்த காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளை சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் தடயம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.த.சா.பொ.1 கட்டையில் இரத்தம் இருந்ததாக அ.த.சா.ஆ.12 மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கார்த்திக் எரகுடி அரசு மருத்துவமனையில் இருந்து வீரப்பன் வாழைத்தோப்பு அருகே உள்ள சமாதிக்கு எப்போது, எப்படி சென்றார் என்பது குறித்து எந்த சாட்சிகளும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கார்த்திக் மேற்படி சமாதி அருகே வேறு நபர்களால் வேறு ஆயுத்தால் தாக்கப்பட்டுள்ளார் என்றும், அதில் தான் அவருக்கு மரணம் ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த விவரம் எனது விசாரணையில் தெரியவந்தும் அதை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் வாக்குமூலங்களை காவல் நிலையத்தில் வைத்து ஜோடித்தேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் நான் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து ஜோடித்தேன் என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யமால் தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

*(2ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக*

*தெரிவிக்கப்பட்டது. )*

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.